# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி
## அசல் வழக்கு எண் 135/2014

பெயர் : தங்கவேல் நாள் : 06.07.2022

வா.சா.1 – 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

வா.சா.1 – தங்கவேல் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

நான் இந்த வழக்கை சர்வே எண் 95ல் உள்ள நிலத்தை எனக்கு உரிமையானது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். கருப்பண்ணகவுண்டரின் மகன்கள் பி.கே.ஜெகநாதன். பி.கே.பழனிசாமி ஆகியோர்கள் 1ம் பிரதிவாதிக்கு அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்த விபரம் எனக்கு 2012ம் ஆண்டு தெரிய வந்தது. விபரம் தெரிந்து இரண்டு வருடம் கழித்துதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். அந்த இரண்டு வருட காலதாமதத்திற்கான காரணம் ஏதேனும் உள்ளதா என்றால், நாங்கள் பட்டா மாறுதலுக்காக ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் மனு கொடுத்திருந்தோம், அதனால் காலதாமதம் ஏற்பட்டது. அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால், தாக்கல் செய்துள்ளேன். அதற்கு ஆதாரமாக ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் கொடுத்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தானது கருப்பண்ணகவுண்டர் சுவாதீனத்திலிருந்து வந்து தற்போது 4ம் பிரதிவாதியின் சுவாதீனத்தில் உள்ளது என்றால், தவறாகும்.

2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1ன் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம் / தங்கவேல்

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,<br>
மாவட்ட உரிமையியல் நீதிபதி,<br>
சங்ககிரி.